

# கண்ணீர் அஞ்சலி!



## ரு. S.V.A. கந்தசாமி நாடார் அவர்கள்

**(மறைந்த நாள் : 8-12-97)**

எங்கள் முயற்சிக்கு உயிர் மூச்சாய்;
வளர்ச்சிக்கு உற்ற துணையாய்;
வாழ்க்கைக்கு வழிகாட்டியாய்
இருந்திட்டு வந்த ஒளிவிளக்குக்கு

*எங்கள் இதய அஞ்சலி!*

**குடும்பத்தினர்**
**மற்றும்**
**லயன் காமிக்ஸ்; முத்து காமிக்ஸ்;**
**விஜய் புக்ஸ் பணியாளர்கள்**

# ஹாட் - லைன்

வாசக நண்பர்களே,

வணக்கம். 'தயாரிப்பில் தாமதம்' என்ற மாமூலான நொண்டிச் சாக்கோடு - ''கொட்டும் மழை'' என்றதொரு புதிய காரணத்தையும் சேர்த்துக் கொண்டு - இந்த இதழின் தாமதத்திற்கு Sorry சொல்கிறேன்! ஊரெல்லாம் வெள்ளம் ஓடும்போது கூட - சிவகாசி பக்கம் மருந்துக்குக் கூட மழையில்லாதிருப்பது வழக்கம்! ஆனால் இந்த முறையோ சிவகாசிக்குள்ளேயே முழங்கால் ஆழம் தண்ணீர் தேங்கும் நிலை!

இம்மாத Scheduleபடி வந்திருக்க வேண்டிய ''ஜேன் இருக்க பயமேன்?'' (லக்கி லூக்) வண்ண இதழ் என்பதால் - அச்சுப் பணிகளுக்கு கூடுதலாக நேரம் செலவாகும்! So - லக்கி லூக் சாகஸம் புத்தாண்டு மலராக வந்திடும்! இந்த இதழோடு ஒரு Pocket காலெண்டர் ஃப்ரீ!

இம்மாதம் - சிக்பில் குழுவினரின் ''மிஸ்டர் முகமூடி!'' light ஆன காமெடி கதை இது!

சென்ற மாதம் வந்திட்ட ''புரட்சித் தலைவன் பிரின்ஸ்'' இதழுக்கு நிறைய பாராட்டுக் கடிதங்கள்! ஆனால் Personal ஆக சொல்லப் போனால் - வழக்கமான பிரின்ஸ் கதைகளின் adventure இதில் missing என்றே சொல்வேன்! சராசரி ரகக் கதை - ஆனால் படு அட்டகாசமான சித்திரங்கள்! இதை ஈடு செய்யும் வகையில் பிரின்ஸ் குழுவினரின் அடுத்த முழுநீள சாகஸத்தில் தூள் கிளப்பி விடலாம்! சரி தானே?

பிப்ரவரி '98ல் - டெக்ஸ் வில்லரின் ''எரிந்த கடிதம்!'' விலை ரூ. 5/-.

மார்ச் '98ல் - மாடஸ்டி குழுவின் ''திகில் தீவு!'' இந்த இதழின் அட்டையில் கார்வினுக்குத் தான் prominence!

இந்தப் பகுதியினை முடிப்பதற்கு முன்னர் - இந்த இதழின் முதல் பக்கத்திலிருக்கும் மரணச் செய்தி பற்றி...! கடந்த 8-12-97-ல் எனது தாத்தா திரு. S.V.A. கந்தசாமி நாடார் அவர்கள் காலமானார்கள்! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக; நமது நிறுவனங்களின் ஸ்தாபகராக - இத்தனை காலமும் எங்கள் முயற்சிகள் அத்தனைக்கும் மலர்ந்த முகத்தோடு ஆதரவு தந்திட்டவர் இன்று இல்லை! அவரது இழப்பை காலத்தாலும் ஈடு செய்ய முடியுமா என்பது சந்தேகமே!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்,
S. விஜயன்.

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
தபால் பெட்டி எண் : 374, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,
அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர்: S. விஜயன்.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ்,
Phone: 04562 - 21159/72649 Fax: 04562 - 21159

# சிக்பில் குழுவினர் சாகஸம்!




அதே சமயம் ரயிலின் பின் பகுதியில் -
எல் பெசோ ஒரு பயங்கரவாதி... ஸார்... ஒரு ரௌடிக் கும்பலை வச்சுக்கிட்டு அப்பாவி ஜனங்களை ஆட்டிப் படைக்கிற கிராதகன்.
எங்க ஊர்லே இதே காரியத்தைத்தான் போலீஸ் பண்ணுது.
உங்க நாட்டுக்கு நான் வர்றதுக்கு முன்னாடி எங்க ஊர்லே என்கிட்டே ஒரு பொறுப்பை ஒப்படைச்சாங்க... டர்ல்டன்கிற பேர்லே அடாவடி பண்ணிக்கிட்டிருந்த நாலு பேரோட கொட்டத்தை அடக்கணும்...
...அதிலே மூணு சகோதரர்கள் கண்மூடி முழிக்கிறதுக்குள்ளே என்னை வந்து சூழ்ந்துக்கிட்டாங்க... நான் துப்பாக்கியாலே குறிவச்சேன்.
டூமீல்...! டூமீல்...! பண்ணிட்டீங் களாக்கும்?
அதுதான் இல்லை - க்ளிக்...! கிள்க்...! - ஆமா என் துப்பாக்கியிலே தோட்டா இல்லை!
பயலுக பயந்து போய் ஓட்டம் பிடிக்கப் பார்த்தானுக. ஆனா...
துப்பாக்கியை தூர் எறிஞ்சுட்டு முஷ்டியாலே முகரையிலே குத்த பாய்ஞ்சேனோ இல்லியோ..



விட்டேனா? ரெண்டு பேரை புடிச்சுட்டேன்... இதுமாதிரி நெறைய சாகஸம் பண்ணியிருக்கேனாக்கும்!
சூரப்புலிதான்!
ஆர்டின் கதை எழுதப் போயிருந்திருக்கலாம்... முன்னுக்கு வந்திருப்பான்! நல்லவேளை... இந்த பயணிகள் யாருக்கும் டால்டன். சகோதரர்களைப்பற்றி முன்னே பின்னே தெரியாது போலிருக்கு!
அடேய் பாப் டால்டன்...! உன்னை மிதிச்சி துவம்ஸம் பண்றேனா இல்லியா பார்னு ஆக்ரோஷமா உறுமினேன்.
டமால்!


ரயில் ஏன் நின்னுட்டுது?
அச்சோ... ரெட்ராக் வந்திட்டுதா?
சுவாரஸ்யமா நான் கதை சொல்லிக்கிட்டிருக்கச்சே தடால்னு பிரேக்கைப் போட்டு கெடுத்திட்டானே பாவி!
அதைவிட பயங்கரமான அனுபவம் காத்துக்கிட்டிருக்கு பிரதர்... பிடி இதை. .
எல் பெசோ கும்பலை அடிச்சி நொறுக்கி உன் பராக்கிரமததை காட்டு... மத்தவங்க ரசிக்கட்டும்!


டுமீல்! டுமீல்!
கொள்ளைக் கும்பலா... அதெப்படி?
இந்தா - அவங்க முதல் கம்பார்ட்மெண்டிலே ஏற்கனவே ஏறியாச்சு... சுட்டுத் தள்ளு!
சரி...!
டுமீல்! டுமீல்!
ஆஆ!
சனியனே!
வண்டியிலே டக்கரா குறிவைக்கிறவன் எவனோ இருக்கான். என்ரிகோ, பாப்லோ... விடாதீங்க


நான் என் கைவரிசையை காட்டறேன்!
தொலைஞ்சானுக!
டக்கரா சுடறீங்க பிரதர் - கொள்ளைக்காரங்க ஒய்ஞ்சுட்டானுக.
இதெல்லாம் எனக்கு சர்வ சாதாரணம்.
டமால்!


கிட்.... உனக்கு அடிகிடி படலியே?
ம்ம்... ரெண்டு காலு... ரெண்டு கை... ஒரு தலை -எல்லாம் சரியா இருக்குடா குள்ளா... ஆனா உடம்புதான் திடீர்னு பெருத்துட்டா மாதிரி தோணுது!
இங்கே நிற்க வாணாம்..., வா ஒதுங்கிப் போயிடலாம்
ஒண்ணு ரெண்டு பேர்தான் முறைப்பா எதிர்க்கிறானுக... ஜீவான், டைகோ, அவனுகளை ஒழிச்சுக் கட்டிட்டு ஆயுதங்களை கைப்பற்றுங்க...
உத்தரவு எல் பெசோ!


ஒரு தோட்டா என் உயிரை குடிக்க இருந்துச்சு... நல்லவேளை கன்னத்தை லேசா உராய்ஞ்சுட்டு போயிட்டுது. நான் ஜாக்கிரதையா இருக்கணும்!
என் ஆளுங்க உள்பட ...வனுமே இதுவரை என்னோட முகத்தை பா..ர்த்ததில்லை... அதனாலே ...துக்கமா போய்...
அந்த பாறைக்குப் பின்னாலே... ம்ம்... ஏற்ற இடம்தான்.
தோட்டா முழக்கம் நின்னுட்டுது... அமைதியா கிடக்கு.
யார் ஜெயிச்சுருப்பாங்க?
இரு... நைஸா எட்டிப் பார்க்கறேன்
ஓ... ஸாரி! மன்னிச்சுக்கோப்பா!



டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
கிட்?
ஓடி வா... நாம இங்கே நிற்க வாணாம்.
அந்தப் பாறைக்குப் பின்னாலே... ஐயோ... ஜிஞ்சியா அது..
என் முகத்தை அவன் பார்த்துட்டான்... அந்த நேரம் பார்த்து எப்படியோ அங்கே வந்து சேர்ந்திருக்கான்... பதட்டத்திலே என் குறி தப்பிட்டுது...
பாஸ்... சுட்டது நீங்கதானா?
என்னவோ ஏதோன்னு இங்கே ஓடியாந்தோம்


அதிகப் பிரசங்கிகளா... திரும்புங்கடா அந்தப்பக்கம்... என்னை முகமூடி இல்லாதப்போ பார்த்தா என்ன நடக்கும்னு தெரியுமில்லே..?
தப்பு பண்ணிட்டோம்...
முகமூடி கழட்டிக்கிட்டு நிப்பார்னு யார் நெனைச்சா... நல்ல வேளை அவரோட முகத்தை நாம பார்க்கலை.
ஓ.கே... இப்போ திரும்பலாம்!
எங்கே என் குதிரை... அந்த அம்மாஞ்சி மூஞ்சிப் பயலை விடக் கூடாது - சுட்டுத் தள்ளணும்!
ரயிலை காலி பண்ணிட்டானுக... எனவே, திரும்ப வரமாட்டானுக!
நான் அப்படி என்ன பெரிய்ய தப்புப் பண்ணிட்டேன்... புரியலியே!
No 374


எங்கே போய் தொலைஞ்சானுக?
பாஸ் கொதிச்சுப் போயிருக்கார்... கண்ணிலே பட்டா தயங்காம சுட்டிடு
இரயிலுக்குள்ளாற தேடணும்னு பயலுகளுக்கு தோணலை - நாம கம்முனு இருக்கணும்!
பின்னே விசிலை அடிச்சு கூப்பிடவா செய்வாங்க!


அச்சச்சோ... தெரியாத்தனமா விசில் மேலே கைவச்சுட்டேன்...
அங்கேதான் இருக்கணும் -போய் பிடியுங்க...
விசிலை நிறுத்தறதுக்கு என்ன செய்யணும்... தெரியலியே!
இதை இழுக்கணுமோ...?


தப்ப விடாதீங்க... விரட்டிப் போங்க !
டுமீல்! டுமீல்!
இப்ப நாம என்ன செய்யறது? சாவு நிச்சயமாயிட்டுது - தோட்டாவா, இரயில் விபத்தான்னுதான் தீர்மானமாகலை!
புடிச்சுடலாம்! அந்த வளைவுக்கு அப்பாலே இரயில்பாதை கிடையாது!
ரியோ கிராண்டோ நதியானது மெக்ஸிகோவையும், அமெரிக்காவையும் பிரிக்கும் எல்லை மையமாக இருந்தது... இரயில் பயணிகள் ஆற்றை படகில் கடந்து மறுபக்கம் வேறு இரயிலில் பயணத்தை தொடருவார்கள்.
அமெரிக்கா
RIO GRANDE
ஸ்டேஷன்
RIO GRANDE
ஆர்டின்
மெக்ஸிகோ
கண்ணை மூடிக்கோ...!


நிறுத்தாம மேலே போறானுகளே!
எப்படியாவது வெளியே குதிச்சிடணும்!
தொபுக்!



தண்ணியிலே மாட்டிக்கிட்டவங்களை புடிக்கிறது லேசு... கொண்டாங்க என்கிட்டே
ஒன்... டூ... த்ரீ...! ஒன்... டூ... த்ரீ...!
என்ன பண்றே கிட்?
நீந்த கத்துக்கறேன்...
நெருங்கிட்டோம்... இன்னும் சில மீட்டர் தூரம் தான்!
டுமீல்! டுமீல்!!


திரும்பி ஓடிப் போயிடுங்க... மெக்ஸிகன் எல்லையை தாண்டுறீங்க...
?
அமெரிக்க ரேஞ்சர்கள்... வா - ஓடிப் போயிடலாம்... நாம எதுவும் பண்றதுக்கில்லை
ஹைய்யா! நாயா, பேயா ஓட்டம் புடிக்கிறானுக!
அவர்கள் யார்னு தெரியலை... ஆனா நல்லவங்க மாதிரி தோணுது
ரொம்ப தொலைவிலேர்ந்து வர்றீங்களோ - அந்த போக்கிரிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிஞ்சுக்கிட்டோம் .. எல் பெசோ கூட்டத்தை சேர்ந்தவர்கள்னு!
திரும்பி வந்துட மாட்டான்களே?
தப்பிச்சுட்டதா நெனைக்காதீங்க -திரும்பி வருவோம்!



மூன்று தினங்களுக்குப் பின் கன்ஸ்மோக்கில்...
ஸார்... இன்னொரு அண்டா லெமனேடுக்கு ஆர்டர் கொடுங்க
SALOON
யீப்ப்பீ...
ஹை... ஹை
டாக்புல் நீடூழி வாழ்க!
என் வீரபராக்கிரம டெபுடியை பாராட்டும் முகத்தான் இதை நான் பருகுகிறேன்.
தன் பிறவிக்குணமான சோம்பேறித்தனத்தை உதறிவிட்டு, நான் சொல்லிக் கொடுத்த பயிற்சிகளை நினைவில் கொண்டு, மெக்ஸிகோவின் முன்னணி கொள்ளையர் கூட்டத்தை விரட்டியிருக்கான்.
போராட்டத்தின் போது ஒவ்வொரு அம்சத்திலேயும் தன் வீர பராக்கிரமத்தை, சாதுரியத்தை வெளிக்காட்டியிருக்கிறான்
எனவே, எல் பெசோவை வென்ற பெருமை என்னையே சாரும்!
ஷெரீப்... நீடூழி வாழ்க
போலீஸ்துறை நீடூழி வாழ்க
கன்ஸ்மோக் செழிக்க துதி செய்வோம்!


எனக்கு வெளியே வேலை இருக்கு கிட்... ஆபீஸை சுத்தம் பண்ணி வை... அப்புறமா சந்திப்போம்
கில்லாடி மனுஷன்! அவரோட சாதனைன்னு சொல்லிப்புட்டாரே!
ஏற்பட்ட எரிச்சலில் லெமனேடு கூட எனக்கு ரசிக்கலை...
கிட் ஆர்டின் பாராட்டுவிழா
கிட் ஆர்டினா? அவனும் மனுஷன்தானே... இந்த மாதிரி பாராட்டுக்கு அவன் உரியவன்தான்!
வாக்காளர்களை தன் வசம் இழுக்கிறதிலேயே குறியா இருக்கார் டாக்புல்...! கிட்டை அனுப்பி...


அது - கிட் ஆர்டினோட அலறல்...
மெக்ஸிகன்! - இரண்டுக்கும் சம்பந்தம் இருக்குமோ?
சிக்பில் - ஓடிவா...! இதோ -கிட்...
கிட்...! - பயங்கரம்!



கத்தி நல்லவேளை சொக்காயை தான் ஊடுருவியிருக்கு !
கட... கட... கட... டக... டக... கட.
யாரோ கத்தினாங்களே? எதுக்காக - யார் கத்தினது?
கிட்டை யாரோ தாக்கியிருக்காங்க ஷெரீப்
கட... கட... கட... டக... டக... கட...
மெக்ஸிகன் தொப்பி அணிஞ்ச ரெண்டு பேர் குதிரையிலே ஓடறதை பார்த்தேன். இது மெக்ஸிகோ ரக கத்தி ஒருவேளை - எல் பெசோ.
அதுக்கு சான்ஸே இல்லை... இதை படிச்சுப் பாருங்க! - புரியும்!
கட... கட... கட... டக... டக...
THE GUNSMOKE SIGNAL



பிரபல எல் பெசோ கொள்ளைக்காரனுக்கு ஜெயில் வாசம்!
இந்த நியூஸ் இப்பத்தான் வந்தது... ஸாண்டா டார்ட்டில்லாவில் ஒரு வழக்கை விசாரிச்சு இந்த தண்டனை கொடுத்திருக்காங்க.
அப்படின்னா... இப்ப நடந்த தாக்குதல்? -குழப்புதே!
அதிர்ந்து போயிருக்கிறாய் கிட் - உன்னை ஒரு பேய் தாக்கியிருக்கு.
என்னோட வேலை எல்லாமே கெட்டுப்போச்சு... இவுனாலே என் தூக்கமும் போச்சு.
மிஸ்டர் பெசோவை ஜெயில்லே போட்டுட்டது நல்ல சங்கதிதானே?
அந்த முகம்... அப்பப்பா பயங்கரம்! - அதை என்னாலே மறக்கவே முடியலை!
அவனோட முகத்தை நீ பார்த்தாயா?
ஆமாம்! முகமூடியை கழட்டினப்போ பார்த்தேன்


இப்போ எனக்கு புரியுது... இதை படிக்கிறேன் -கேளுங்க!
மூஞ்சியை ஏன் இப்படி வச்சுக்கிட்டு டல்லடிக்கிறே... உற்சாகமா இருக்க வேண்டியதுதானே
குற்றவாளி சுமத்தப்பட்ட குற்றங்களை முழுவதுமாக மறுத்தான். அவனை யாராலும் அடையாளம் காட்ட முடியவில்லை... எல் பெசோவை முகமூடி இல்லாத நிலையில் யாருமே பார்த்ததில்லை!
ஆமாம்... கிட்டை தவிர வேறு யாருமே பார்த்ததில்லை. எல் பெசோவை அடையாளம் காட்டக்கூடிய ஒரே சாட்சி கிட்தான்.
அவனை நான் அடையாளம் காட்டமாட்டேன்... அவன் என்னை நல்லா ஞாபகம் வச்சிருப்பான்... அவன் எதிரே போனா... செத்தேன்!
மெக்ஸிகோ ஷெரீப்புக்கு தந்தி கொடுப்போம்... வழக்கிலே கிட் சாட்சியா ஆஜராகணும்.
ஆமா .. நீதிக்கு தோள் கொடுக்கணும்.
அடையாளம் காட்டணும் - அவ்வளோதான்!
நீ போய் தூங்கு கிட்... எல்லாத்தையும் ஆலோசனை பண்ணி வைக்கிறோம்... என்ன தீர்மானம்னு காலையிலே சொல்றோம்.
ஓ.கே. எல்லோருக்கும் குட் நைட்.
ஏதேதோ சொல்லிக் குழப்புறாங்க -எனக்கு எதுவுமே புரியலை.


என்னது...? - சுடுதண்ணீர் பாட்டிலா?
ஆகா
என்
எவ்ளோ
ஆனா... இந்த பாட்டில் சற்று வித்தியாசமா இருக்குதே..
சூடா இல்லை - ஜில்லுன்னு இருக்கு...
ஸாண்டா டார்டில்லாவுக்கு போக குறுக்கு வழி...
ஷூ... சீப்..!



இந்த கறுப்பு பாட்டில் என் படுக்கையிலே இருந்தது... இதை எப்படி திறந்து வெந்நீர் ஊத்துவீங்க?
நீயா முயற்சி பண்ணி கண்டுபிடிச்சுக்கோ - நான் பிஸி!
கறுப்பு வெந்நீர் பாட்டிலா?
அதை இப்படிக் கொடு!
ஏன் என்னோட பாட்டிலை எறிஞ்சுட்டே... உனக்கென்ன பைத்தியமா?



நல்லவேளை - பாழடைஞ்ச கட்டிடத்துக்குப் பின்னாலே குண்டு வெடிச்சது... அங்கே யாரும் இல்லை...
கட... கட... டக... டக்...
சிக்பில் சொன்னதில் முன்பாதி சரிதான்...
... ஆனால் பின் பாதி - தவறு!
மறுபடியும் குளறுபடி... தப்பாயிட்டுது!
குண்டா? நிச்சயமாத்தான் சொல்றீங்களா? அது வெறும் பாட்டில் இல்லியா?
உன் கழுத்து மேலே இருக்குதே -அதுதான் காலி பாட்டில்!
என் கழுத்து மேலேயா?
ஆங்... சரியா சொன்னீங்க பாஸ்!


அது காலிங்கிரஃத இதுக்கு முன்னாடி நீங்க என்கிட்டே சொல்லவே இல்லியே பாஸ்!
(படத்தை கூர்ந்து கவனிக்கவும்!)
போகுது... வுடுங்க! நாம கவனிக்க வேண்டிய முக்கியமான வேலை நெறைய இருக்கு! கிட்டை தீர்த்துக்கட்ட இன்னிக்கே ரெண்டு முயற்சி நடந்திருக்கு!
ஸாண்டா போர்ட்டில்லாவில் கிட் சாட்சி சொல்லக்கூடாதுங்கறதிலே தீவிரமா இருக்காங்க... அவன்கிட்டே யாரையும் நெருங்கவிடக்கூடாது... யாரையும் நம்பவும் கூடாது.
வாஸ்தவம்தான்...! அந்த சண்டாளர்கள் எந்த ரூபத்திலே வேண்டுமானாலும் வரலாம் - போலி பார்சல்... போலி தந்தி - இப்படி!
மிஸ்டா ஆர்டினுக்கு தந்தி - கொஞ்சம் கதவை திறங்க..


நான் சொல்லி வாய் மூடலை... வந்துட்டானுக பார்...
அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாம்.
ஷெரீப்... இசகு பிசகா எதாவது பண்ணிடாதீங்க... கொஞ்சம் பொறுமை வேணும்.
என்ன இளிச்ச வாயன்கள்னு நெனைச் சாங்களா..?
டேய்... சோமாறி
நான் ஒரு தப்பும் பண்ணலை... தந்தியை எடுத்து வந்தது தப்பா?
மூடுடா வாயை... புளுகாதே
ஸாண்டா டோர்ட்டில்லாவிலுள்ள ஜட்ஜுக்கு நாம கொடுத்த தந்திக்கு பதில் வந்திருக்கு...
கிட் உடனடியா அங்கே வந்து சேரணுமாம்... செலவுக்கான பணம் அங்கே வந்ததும் கிடைக்குமாம்... அவனுக்கு ஒரு ரூம் கூட ஏற்பாடு பண்ணி வச்சிருக்காங்களாம்!
இப்பவாவது துப்பாக்கியை அப்பாலே திருப்பலாமில்லியா!



தாமதிக்கக்கூடாது... உடனடியா பயணத்துக்கு ரெடியாகணும்..
அப்போ... நான் -போகலாமில்லையா?
ஆமா... இனியும் ஏன் நீ இங்கே நிக்கணும் - ஓடிப்போயிரு ...
டமார்!
யார்ரா அவன் - மறுபடியும்..
டொக் டொக்
இந்த தபா நிச்சயமா அந்த போக்கிரிகளாத்தான் இருக்கும். நான் சும்மா விடப் போறதில்லை...
வ... வந்து ஸார்... டிப்ஸ் வாங்கிப் போக மறந்திட்டேன்!


விடிகாலையில் -
ஒரு ம்ணி நேரத்தில் எல்லையை தாண்டிடலாம்.
காற்று இதமா வீசறதாலே குதிரைகளும் களைப்படையலை...
எல்லையை தாண்டின பிறகு குதிரைகளுக்கு ஓய்வு கொடுத்திட்டு ஒரு மெக்ஸிகன் கோச்சை அமர்த்திக்கிட்டு பயணத்தை தொடருவோம்
நல்ல ஐடியா
ஒரு மணி நேரம் கழித்து -
நாம மெஸிகோவுக்-குள்ளாற வந்தாச்சு
MEXICO
ARIZONA
போன தபா நான் இவ்வழியா வந்தப்போ இவ்ளோ அமைதியா இருக்கலை...
ஹோ...!
டமால்!


கட... கட... டக...
டக...
என்ன ஆச்சு?
ஸ்கல்...
தப்பிப்போயிட்டான்.
நாம இதை கொஞ்சமும் எதிர்பார்க்கலை.
ஆமா ஏதோ பிக்னிக் போற மாதிரி அலட்சியமா வந்தது மடத்தனம்.
இனிமே நாம ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும்... முடிஞ்சவரை சீக்கிரமா ஸாண்டா போர்ட்டில்லா போய் சேர்ந்திடணும்.
இப்படி போறதைவிட கோச்சு வசதியா இருக்கும்னு தோணுது...
எது எப்படி இருந்தாலும் நாம காலை சிற்றுண்டியை மறக்கலாமோ?


...காட்டு வழி போறவளே... கன்னியம்மா!
...உன் காசு மாலை பத்திரம்மா... பாத்துக்கோம்மா
கொஞ்சம் நில்லுங்க...
ஒரு வண்டி வருது
-கொள்ளைக்காரங்களோ?
சாதாரண கிராமவாசிகளா இருக்கும்
- எதுக்கும் நாம எச்சரிக்கையா
இருப்போம்!
உஷார்...
அப்பப்பா... தூசி கண்ணை
மறைக்குது


வீணா கலவரப்பட்டுட்டோம்னு நெனைக்கிறேன்
அவங்களோட நல்ல காலம்...
இனி ஆபத்தில்லை...! கிட்! நீ
ஐயோ... கிட்டை காணோமே!
அவனை நம்ம பார்வையிலேயே வச்சிருந்திருக்கணும்
அந்த வண்டி வந்தது நம்மோட கவனத்தை திசை திருப்புறதுக்குன்னு தோணுது
இதோ - தடங்கள்!
அவனை அவங்க இழுத்துட்டுப் போயிருந்தா கத்தியிருப்பானே - அதுகூட நம் காதிலே விழலியே!
இதுக்கு பழிக்குப் பழி வாங்காமல் நான் விடமாட்டேன்
கிட்டை தேடி அலைய வாணாம்...


அந்த வண்டி போற நேரத்திலே கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கலாமேன்னு இங்கே வந்தேன்... சீஃப் நீங்களும் கூடா இருக்கிற மாதிரி தோணுது... வந்து சேர்ந்து உட்காருங்க ..
கூடா... இல்லைடா -கொதிப்படைஞ்சு போயிருக்கேன்... உன்னை
!
தொம்!
போய் எல் பெசோ கூட்டத்தோட சேர்ந்துக்கிட்டு உன்னை வேட்டையாடப் போறேன்...
வாங்க ஷெரீப்... ரொம்ப நேரம் வீணாயிட்டது...
எல்லாம் இவனாலேதான்
இருட்டறதுக்கு முன்னாடி நாம ஊர் போய்ச் சேரணும்.


ம்ம்... சுடு!
டுமீல்! டுமீல்!
ஓடிப் போய் பதுங்குங்க...
அடிச்சுட்டோமா?
ண்ணு ரெண்டு பேர் பாக்கி இருக்காங்க... அவங்களையும் தீர்த்துப்புடலாம்..
புல்டாக்...? - புல்டாக் எங்கே போயிட்டார்?
கொஞ்சம் ஓவரா பாய்ஞ்சுட்டார்...
கட... கட... டக...
எப்போ பார்த்தாலும் இதே பொழைப்புத்தானா - சே...



எதிரிகளுக்கு ஒரு பாடம் கற்பிச்சாகணும்... இங்கே வந்ததே தப்புன்னு அவனுக உணரணும்...
!?
மெள்ள ஊர்ந்து வர்றான்... இன்னும் கொஞ்சம் வரட்டும்...
?
ஒண்ணு...
ரெண்டு...
...மூணு!


தொம்!
கடகடாா
கும்!
இவனை ஒரு வழி பண்ணிட்டேன்...
அடுத்தவனை அனுப்பு சிக்!
தூள் பண்ணிட்டீங்க சீஃப்
கைகளை தூக்கு - மேலே
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!


சிக்?!
தோள்பட்டையிலே ஒரு குண்டு பாய்ஞ்சிருக்கு - அவ்வளவுதான்.
ஓடியாங்க... இங்கே இன்னொரு பேஷண்ட் கிடக்கான்.
ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனாத்தான் பொழைப்பான்.
தற்காப்புக்காகத்தான் சுட்டேன்.
மேனுவலை புடிச்சுக்கிட்டானுக... இனியும் இங்கே இருந்தால் ஆப்த்து!



இனி - என்னை புடிக்கக் முடியாது!
நான் அடிச்சது போறாது போலிருக்கு - தப்பி ஓட்டம் புடிச்சிட்டானே!
க்ளாப்... க்ளாப்...
தன் கூட்டாளிகளை கூட்டிக்கிட்டு வருவான்
நாம இங்கே தாமதிக்கக்கக்கூடாது
காயமடைந்த ஆசாமி சுயவுணர்வில்லாமல் கிடக்கிறான்.. அவன் பேசினா எல் பெசோ பற்றி ஏதாவது விபரம் கேட்டு தெரிஞ்சுக்கலாம்.
சான்ஸே இல்லை... எல் பெசோவை நேரே பார்த்த ஒரே நபர் என்னோட டெப்டிதான்.
அவங்களை இனிமே தேடிப் போறதிலே அர்த்தமில்லை... தோள்லே குண்டடி பட்டவனுக்கு சிகிச்சை அளிக்க எங்கே போவாங்கன்னு எனக்குத் தெரியும்!


பலமணி நேரம் கழித்து ஸாலர்டா டோர்ட்டில்லாவுக்கு முந்தைய நிறுத்தத்தில் -
கட்டுப் போட்டாச்சு... கொஞ்ச நாளைக்கு பூரண ஓய்வு எடுக்கணும்...
இப்போ அதுக்கு நேரமில்லியே டாக்டர்
நாளைக்கு கோச்சிலே நாங்க ஸாண்டா டோர்ட்டில்லா போயாகணும்... கேஸ் முடிஞ்சப்புறம் ரெஸ்ட் எடுத்துக்கிறேனே?
இன்னொரு பேஷண்டையும் நல்லா கவனிங்க... அவனை அரெஸ்ட் செய்ய போலீஸை அனுப்பி வைக்கிறோம்.
அவன் இருக்கிற நெலைமையிலே தப்பி ஓட வாய்ப்பேயில்லை.
பசிக்குது - சாப்பிடபோகலாம்!
தின்னிப் பண்டாரம்...
இங்கேதான் நமக்கு அறை ஏற்பாடு பண்ணியிருக்கிறதா தந்தியிலே இருந்திச்சு



உங்க ஊர்லே கார்பெட் உபயோகிக்கிற வழக்கமே கிடையாதா ?
ஒண்ணு இருக்கு - ஆனா சுத்தமா இல்லை!
இருக்கிறதிலே இந்த ரூம்தான் பெஸ்ட்... இங்கேர்ந்து பார்த்தா கல்லறை அட்டகாசமா காட்சியளிக்கும்.
சதக்!
நாம இங்கே இருக்கோம்னு அதுக்குள்ளாற தெரிஞ்சுக் கிட்டானுகளே -எப்படி?
எது சேதமடைஞ்சாலும் வாடிக்கை யாளர்கள்தான் பொறுப்பு -ஆரம்பத்திலேயே சொல்லிப்புட்டேன்...
ராத்திரி தூங்கினோம்னா காரியம் கெட்டிடும் -விழிப்போட இருக்கணும்
காயம் பட்டிருக்கிறே -நீ போய் தூங்கு!
இரவு யாரும் தூங்கவில்லை... எந்த நேரம் எது நடக்குமோ என்று சஞ்சலத்தோடு இருந்தார்கள்
அழகான பொண்ணுதான்... அதுக்கேத்த கண்ணுதான்...


வந்து தொலைச்சானுகன்னாக்கூட தேவலை... சண்டைபோட்டு ஒஞ்சிடலாம்... இப்படி காத்து நிற்கிறது பொறுமையை சோதிக்குது.
... தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே...
ஏய்...கொஞ்சம் நேரம் சும்மா இருக்கியா ?
இந்த சந்தர்ப்பத்திலே பாடற பாட்டா அது..? அறிவு வாணாம் ?
அந்தப்பாட்டு புடிக்கலைன்னா சும்மா சொல்ல வேண்டியதுதானே? அதைவுட்டுட்டு -
ஓ.கே... - ... தூங்காதே தம்பி தூங்காதே...
ஆச்சரியமா இருக்கே... எல் பெசோ சமர்த்தன் மாதிரி தோணுதே
ஹே... நீ எல் பெசோவை வரைய முயற்சி பண்றியா... தள்ளு - நான் பார்க்கிறேன்
வாணாம்... அது நல்லா வரலை!


ஷெரீப் சொல்ற மாதிரி எல் பெசோவோட மூஞ்சியை நீ வரைஞ்சு காட்டினா உபயோகமா இருக்கும் கிட்!
அடுத்த அழுக்கு ஜன்னல்லே வேறொண்ணு ஜோரா வரையறேன்!
முக்கியமான அம்சம்... பன்றியோடது மாதிரி இடுங்கின கண்கள்..!
அப்புறம் - எருதோட மூக்கு... ம்ம்... மீசை எப்படி இருந்திச்சு? ஆங்... -இப்படி...! சரியா நறுக்காம காமா சோமான்னு...
அருவறுப்பான மூஞ்சி போலிருக்கு!
கோணல் மாணலான பல்வரிசை... முரட்டு நாவு... கடா எருமை மாதிரி முறைக்கிற பார்வை...
ராட்சஸனோ - எங்கே காட்டு... பார்க்கலாம்
அடடே... ஆச்சரியமா இருக்கே... இதை இதுக்கு முன்னாடி எங்கேயோ பார்த்திருக்கேனே - எங்கே!
வாசகர்களே: அது ஷெரீப்போட முகம் தான் என்பது உங்களுக்குத் தெரியாதா - என்ன?
வேண்டாம் பாஸ் - பார்க்காதீங்க.
உடனே அழிடா இதை - ராஸ்கல்.
உன் மூக்கை வச்சே முழுசையும் அழி -அப்பத்தான் உனக்கு புத்தி வரும்!


அந்த நீண்ட இரவும் ஒரு முடிவுக்கு வந்தது...
கோச்சு வண்டியை பிடிக்க நெனைச்சா இப்ப எழுந்திரிச்சாத்தான் உண்டு..
டொம்! டொம்!
ஓ... நீங்க தூங்கவேயில்லியா? இதை முதல்லேயே சொல்லியிருந்தா இப்படி நான் தொண்டை கிழிய கத்தியிருக்க மாட்டேனில்லையா...
சரி... சரி... போய் ப்ளாக் காப்பி கொண்டா!
டீயும் டோஸ்ட்டும் கொண்டாறட்டுமா?
ப்ளாக் காப்பி கேட்டேன்!
எனக்கு ஹாட் சாக்லேட்... கிரீம், பட்டர் நெறைய இருக்கணும்
டீ வாணாமா?
ஆமா... அத்தோட முட்டை, கறி, ப்ரூட்ஜூஸ் எல்லாம் எடுத்துவா..
டீ வாணாமா?
இல்லை... ப்ளாக் காப்பி!
அதாவது நாலுடீயும் டோஸ்ட்டும் -வேறு எதுவும் எங்ககிட்டே இல்லை!


ராத்திரி முழிச்சிருந்தது அலுப்பா இருந்ததுன்னா இவனாலே பைத்தியமே புடிச்சிடும்போலிருக்கே!
வாங்க... கோச்சிலே ஏறலாம்... டட்...டட்...
அதென்ன... டட்... டட்? -சின்னக் கொழந்தை மாதிரி
இன்னிக்கு ஏனோ பயணிகள் சுறுசுறுப்பா இல்லை!
கொர்...ர்ர்... கொர்ர்...
இந்த சோகத்தை கேளுங்க... சாட்சி சொல்லப் போறது நான்... அப்போ -கஷ்டமெல்லாம் எனக்குத்தானே..? கூட வர்றவங்க இப்படி தூங்கினா எனக்கு எப்படி இருக்கும்?!
நீங்க சொல்றது விளங்கலையே ஸார்..
ஆடிப் போயிருப்பானுக... எனவே, லேசா தட்டினா போறும் -


கமான்!
தூத்தேறி...! எல் பெசோ கும்பல்!
ஓடுங்க... ஓடுங்க - இன்னும் வேகமா!
ஹே... ஏன்தான் இப்படி தலைதெறிக்க விரட்டறானோ தெரியலியே!
ஐயோ... அ...ம்...மா..!


உங்களுக்கு கஷ்டமா இல்லியா... மேடம்?
என்னதான் நடக்குது?
பஸ்ட் கிளாஸ் பயணிகளை நடத்தற விதமா இது?
என்னப்பா... வண்டியோட்டி... எங்களை கொன்னுடறதுன்னு தீர்மானிச்சிட்டியா... இப்படி சித்திரவதை படறதுக்கு தோட்டா தேவலை -
ஒரு பேச்சுக்கு சொன்னா... அப்படியே செஞ்சுட்டானே!
ஆபத்து...! எல்லோரும் துப்பாக்கியை எடுங்க!


டமீல்! டமீல்!
வழக்கமா கொள்ளையர்கள் இரயிலை தாக்கினா ஜெயிக்கிறது பயணம் செய்கிற வெள்ளையர்கள்தான் -இல்லியா?
அதிலென்ன சந்தேகம்?
டமீல்!
ஙே... நீ சுட்டது - என்னை!
டிரைவரை கவனி - அவனை தீர்த்துட்டா நம்ம வேலை சுளுவாயிடும்.
டமீல்!
அஹ்!
டிரைவரை தாக்கிட்டாங்க... -ஆபத்து
வண்டி தறிகெட்டு ஓடப்போறது.


பதறாதீங்க... நான் போறேன் -எனக்கு பாதுகாப்பு கொடுங்க ஷெரீப்.
உனக்கென்ன பைத்தியமா?
வண்டியை நான் ஓட்டிப் போனா எல் பெசோ பாராட்டுவார்.
சகடியானத்தை நான் பொறுப்பேற்றுக்கறது ஒண்ணுதான் ஆபத்திலேர்ந்து மீள ஒரே வழி.


ஓ . . பயங்கர போட்டி!
உனக்கு சான்ஸே இல்லை - குதிச்சுடு!
ஓடற வண்டிலேர்ந்து குதிக்கிறது எப்படி?
ரெண்டு பேருக்கு இங்கே இடமில்லை. எனவே -
நீ இடத்தை காலிபண்றே!
ஆட்ட விதியை மீறியது நீதான்!
சீ சொத்!
அவனை ஏன் கொல்லாம விட்டே?
கேட்டா ஆச்சரியப்படுவே - சாக அவன் இஷ்டப்படலை!


பிரயோஜனப்படாது - நிச்சயம் துரத்தி வந்து பிடிச்சுடுவானுக.
மனம் தளராதே - ம்ம்... ஓடுங்கடா ராஜா
அவனுகளை நான் விடப் போறதில்லை.
ஒவ்வொரு தபாவும் தோட்டா குறி தவறும்னு எதிர்பார்க்கிறது பேராசைதான்...
டுமீல் டுமீல்!
என் துப்பாக்கியிலே ரெண்டு தோட்டாதான் பாக்கியிருக்கு எனவே-
க்ளிக்!
?!
கிட்... என்கிட்டே தோட்டா தீர்ந்திட்டுது... நீ ஆரம்பி - சீக்கிரம்!



இ... இதோ -
நே...
ணங்!
ஸாரி மேடம்...! இதோ... ரெடியாயிட்டேன்...
கூத்தடிக்காதே!
ஹே... என் துப்பாக்கி!
வய்சானவன்னு லேசா எடை போட்டிடாதீங்க... இப்பப்பாருங்க என்ன நடக்குதுன்னு -
முதல்லே நெலவரம் என்னன்னு தீர்க்கமா ஒரு நோட்டம் விட்டுக்கறேன்
ஹா...ஹா... வயசான கிழம் எட்டிப் பார்க்குது - ஜன்னல் வழியா!
போணி பண்ணுவோம் - வா!
டுமீல்!
டுமீல்!



தூள் கிளப்பிட்டீங்க...! உங்க கிட்டே நாங்க இவ்வளவு எதிர்பார்க்கலை!
ரொம்ப தாங்க்ஸ்...!
அதோ வரா வெநாச்சு...
ஊஹூம்... அத்தனை பேரையும் பரலோகம் அனுப்பாம ஓயமாட்டேன்...
இதுக்கு எப்படி பதில் சொல்றாங்கன்னு பார்ப்போம்!


யீயீ!
டுமீல்!
டுமீல்!
ட்ஷ்ஷ்
டுமீல்!
ட்ஷ்ஷ்!
டுமீல்!
ட்ஷ்ஷ்
டுமீல்!
அ... அ... தெப்ப..டி?
நடந்ததை சொன்னா எல் பெசோ
நம்பப் போறதில்லை. .
டூம்ம்!


பேசாம வடதுருவத்துக்குப் போய
ஏதாச்சும் பிசினஸ் பண்ணி
பொழைச்சுக்க வேண்டியதுதான்...
அப்பாடி.... ஒருவழியா
ஊருக்குள்ளாற வந்திட்டோம்
GANTA TORTILLA
ஐயா பெரியவரே... உங்களுக்கு
எப்படி நன்றி சொல்றதுன்னே
தெரியலை... சட்டத்தை பராமரிக்க
உங்க மாதிரி ஆளுங்கதான்
நாட்டுக்குத் தேவை...
நான் இப்போ வேற என்ன
பண்ணிக்கிட்டிருக்கேன்னு
நெனைச்சீங்க...?
...என் பெயர் மானுவல் குகாராச்சா! - ஸாண்டா
டோர்டில்லாவோட ஜட்ஜ்!


நீங்கதான் ஜட்ஜா..? உங்களை பார்க்கத்தான் வந்தோம்... ரியோகிராண்ட் வழக்கில் இவர்தான் சாட்சி...
சரியா சொல்றதா இருந்தா...
...ரிடையர்டு ஜட்ஜ்... புதுசா ஒரு ஜட்ஜ் போட்டிருக்காங்களாம்... நானே இன்னமும் அவரை பார்க்கவில்லை...
அவர் விசாரிக்கப் போற முதல் கேஸ் எல் பெசோ விவகாரம்தான்.நகரமே திரண்டு வரும் வழக்கை கவனிக்க!
உள்ளூர் டாக்டரும் வருவார் இல்லியா?
இரு... டாக்டரை உடனே அனுப்பி வைக்கிறோம்
கோர்ட் இந்தப் பக்கமா இருக்கு
சமர்த்தா சாட்சி சொல்லணும் -சொதப்பிடாதே!
இதுதான் கோர்ட் கட்டிடம்!


கட்டிடம் முழுக்க ஜனத்திரள் - நாமும் உள்ளே புகுந்து இடம் பிடிப்போம்!
நான் நிரபராதி!
மேலே பேசாதே எல் பெசோ... நீதான் குற்றவாளின்னு தீர்மானமா தெரியுது... ஆனா துரதிர்ஷ்ட வசமா அந்த அமெரிக்க சாட்சி இங்கே வந்து சேரலை... ஆனா...
மறுபடியும் அடிச்சி சொல்றேன்... நான் எல் பெசோ இல்லை...
உண்மை விரைவிலேயே வெளி வந்திடும்... இதோ வந்திருக்கார் ரியோ கிராண்ட் சம்பவத்தின் சாட்சி...
ஆமாம்... அந்த போக்கிரியின் மூஞ்சியை நேரில் கண்ட ஒரே நபர் இவர்தான்... கிட்! நிதானமா பதில் சொல்லணும். இந்த ஆள்தான் எல் பெசோவா?
ஆமா... அவனேதான்... துளி சந்தேகமும் கிடையாது


பொய்... பொய்... ஏதோ குளறுபடி நடந்திருக்கு... இது அபாண்டம்... குற்றவாளி இவருக்கு இலஞ்சம் கொடுத்திருக்கணும்!
குளறுபடி பண்றது நீதான்யா... நான் எல் பெசோன்னு சொன்னது இந்த ஆளை... இந்த குதிரை மூஞ்சிப் பயலை.
இதுதான் உண்மை. ஜட்ஜ் நான்... என்னை தாக்கி என் நியமன பத்திரங்களை பிடுங்கிக்கிட்டு ஜெயில்லே அடைச்சு வச்சுட்டான். இந்த அயோக்கியன்!
முழுப் பொய்... ஜூரிகளே தயவு செய்து இவன் சொல்றதை நம்ப வேண்டாம்..
கொஞ்சம் பொறுங்க... சரியான கேலிக்கூத்தா இது இருந்தாலும் ஒரே ஒரு விஷயம் ரொம்ப தெளிவானது.


கிட் ஆர்டின் ஒரு தபா கூட பொய் பேசினதில்லை . . .
எல் பெசோவை பிடிக்க...
... உங்க தாத்தாவே வந்தாலும் முடியாது!
எல்லோருக்கும் குட் பை!
வுட்டுடுவோமா என்ன?


தொப்!
தூத்தேறி...! செம்பட்டை தலையன்
எங்கே மாயமா மறைஞ்சான்?
எமகாதகப் பயல்... எங்கே இருந்தாவது தீடீர்னு மேலே பாய்வான் - நான் ஜாக்கிரதையா இருக்கணும்
ஆவ்...வ்!
மேலே இழுக்கவா... இல்லே - கீழே போட்டுறட்டுமா!
டக்கர்... ஷெரீப்!
சற்று நேரம் கழித்து -
அவனுக்கு தண்டனை வழங்குகிற பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்கு!


தப்பா புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க நண்பரே. தற்காலிக பொறுப்பு ஏற்கத்தான் உங்களை அனுப்பினாங்க... நான் இருக்கச்சே நீங்க தண்டனை வழங்க முடியாது.
பாவம் எல் பெசோ! அவர் மாதிரி ஜட்ஜுகள் கொடுக்கிற தண்டனை ரொம்ப கடுமையா இருக்கும்!
பொறுப்பேற்க நான் வர்றேன்னு தெரிஞ்சதும் வழியிலேயே என்னை மடக்கி, நியமன பத்திரங்களை புடுங்கிக்கிட்டு கோர்ட்டிலே என் இடத்தையும் எடுத்துக்கிட்டான்.
அந்த அதிகாரத்தில் எல் பெசோ நிரபராதின்னு பதிவு பண்ண முயற்சி பண்ணினான்... நீங்க வந்து சேர்ந்தீங்க சரியான சமயத்திலே!
ப்பூ... இவ்வளவுதானாக்கும்... கண்மூடி முழிக்கிறதுக்குள்ளே எல்லாம் நடந்து முடிஞ்சுட்டுது... இதுக்குத்தானா இத்தனை பேர் ஆர்ப்பாட்டமா என்னோட வந்தீங்க... நானா தனியா வந்து ரொம்ப சுலபமா சாட்சி சொல்லி முடிச்சிருப்பேனே!
முற்றும்

# "மாதம் ஒரு முகவர்"

| | |
|---|---|
| பெயர் | : ரா. வெங்கடேஷ். வயது : 13 |
| முகவரி | : Sri Venkateswara Book Stall,<br>Central Bus Stand,<br>Pollachi - 642 001. |
| சொந்தமாக புத்தகக்கடை உள்ளதா அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? | : சொந்தமாக புத்தகக்கடை உள்ளது. கடைகளில் விநியோகம் செய்வதும் உண்டு. |
| லயன்/முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? | : தாங்கள் முத்து காமிக்ஸ் வெளியிட ஆரம்பித்த காலத்திலிருந்தே விற்பனையாளராக இருக்கிறோம். |
| இதர ஏஜென்சிகள் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு? | : இந்தியா டுடே, பாக்யா, நக்கீரன். |
| லயன்/முத்து காமிக்ஸ் இதழ்களின் நிறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? | : 1. பிரதிமாதம் தவறாமல் காமிக்ஸ் வெளிவருகிறது. 2. தாங்கள் வெளியிடுகின்ற காமிக்ஸில் கதைகள், அட்டைப்படங்கள் சிறப்பாக உள்ளன. |
| குறைகள் | : உள்ளே உள்ள படங்கள் தெளிவாக இல்லை சில கதைகளில் மட்டுமே. |
| விற்பனை உயர்விற்கு என்ன பண்ணலாம்? | : தயவு செய்து "ராணி காமிக்ஸ்" போல மூன்று ரூபாயில் ஒரு காமிக்ஸ் வெளியிடவும். |

# மாதம் ஒரு வாசகர்



வாசகர் பெயர் : **M.** தவச்செல்வம் வயது : 17

முகவரி : 45/11, நெல்சன் ரோடு,
திருவானைக்காவல்,
திருச்சி - 5. Pin: 620 005.

கல்வித்தகுதி : +2 (எழுதியுள்ளேன்)

நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள் : கிரைம் நாவல், அம்புலிமாமா.

இதுவரை லயனில் வந்த கதைகளில் பிடித்தது : நடுக்கடல் நரகம், மரணமுள்.

பிடிக்காத கதை(கள்) : ஹாலிவுட்டில் ஜாலி

உங்கள் ஆசை : விஜயன் சாருடன் சேர்ந்து அரட்டை அடிக்க ஆசை.

பொழுது போக்குகள் : கிரிக்கெட், ஷெட்டில்கார்க்.

படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? : திருஷ்டி சுத்திப் போடுவேன்.

'98 ஏப்ரலில் வருகிறது!

# மெகா ஸ்பெஷல்!

## (ஒரு டிரெய்லர்)




முத்து காமிக்ஸ், தபால் பெட்டி எண்: 253, சிவகாசி - 626 123.



விரைவில் - ஜனாதிபதியிடமிருந்து ஒரு தூதுவர் வந்திட்டு - கேப்டன் டைகரை ஒரு பயங்கரமானதொரு பொக்கிஷ வேட்டைக்காக மெக்ஸிகோவுக்குள் செல்லுமாறு கட்டளையிடுகிறார்!
இராணுவத்திலிருந்து உன்னை டிஸ்மிஸ் செய்து விட்டோம்! எதிரிகளுக்கு துளியும் சந்தேகம் வராது!
அது சரி - நான் தேடிப் போவது அரை மில்லியன் டாலர் பெறுமானமுள்ள தங்கத்தை! ஆனால் அது எங்கே - யாரிடம் உள்ளது என்று எதுவுமே தெரியாதே!
''1865-ல் அமெரிக்காவின் வட மாநிலங்களுக்கும் - தென் மாநிலங்களுக்கும் இடையே நடைபெற்ற உள்நாட்டுக் கலகத்தின் போது - தென்னவர்கள் பதுக்கிச் சென்ற பொக்கிஷம் இது''!
''அதனை பாதுகாத்து - பதுக்கி வைத்திட்ட ஆசாமி இப்போது நமக்கு தூது அனுப்பியுள்ளான்! அவனை சந்தித்து - புதையலை மீட்டு வர வேண்டியது உன் பொறுப்பு!''
தங்கம் என்றால் பிணமும் வாய் திறக்குமே! இந்த அரை மில்லியன் டாலர் பெறுமானமான **''மின்னும் மரணத்தை''** விரட்டிச் செல்லும் ஆட்டக்காரர்கள் இதோ :
ஜிம்மி
டைகர்
உல்லி ரெட்


தென்மார்நிலத்து இராணுவத்தின்
முன்னாள் படைவீரர்கள்! இன்று
கொலைக்கு அஞ்சாத வெறியன்கள்!
டைகரின் பயண நோக்கம்
இவன்களுக்கும் மூக்கில் வியர்த்திட
-கழுகாய் புறப்படுகிறார்கள்!
மெக்ஸிகோ மண்ணில் எங்கோ பதுங்கியிருக்கும் புதையலை கை நழுவவிடக்கூடாது என்ற வெறியில் திரியும் மெக்ஸிகோ அரசுப் படைப்பிரிவுத் தளபதி விகோ! இரத்த வெறியன்!
இவன் மெக்ஸிகோ அரசுக்கே நாமத்தை சாத்தி விட நினைக்கும் உள்ளூர் கவர்னர்!
மயக்கும் அழகி!
ஆட்டத்தின் மையம் இவளே!







1998... ஏப்ரலில் வருகிறது...! முன்பதிவு செய்திடுவீர் !